மாதிரி வினாத்தாள்

கரிமச் சேர்மங்களைத் தூய்மைப்படுத்துதல் 3

11th Standard

**வேதியியல்**

Reg.No. :

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 46

## பகுதி - அ

9 x 1 = 9

1) கரிமச் சேர்மங்கள் கீழ்கண்டவைகளுள் எவற்றில் கரையும் ?

(a) முனைவுத் தன்மையற்ற கரைப்பான் (b) முனைவுத் தன்மை கொண்ட கரைப்பான் (c) நீர் (d) Hcl

2) நிறம்கொண்ட கரிமச் சேர்மங்களின் நிறத்தை நீக்கப் பயன்படுகிறது

(a) விலங்கு கரித்துள் (b) கார்பன் (c) கரி (d) அகச்சிவப்புக் கதிர்கள்

3) நைட்ரோபென்சீன் மற்றும் பென்சீனை பிரித்தெடுக்கப் பயன்படும் முறை

(a) நீராவியால் காய்ச்சி வடிதல் (b) படிமாக்கல் (c) பின்னப் படிமாக்கல் (d) வண்ணப் பிரிகை முறை

4) குறைந்த கொதிநிலை வேறுபாடு கொண்ட ஒன்றுடன் ஒன்று கலங்கும் தன்மையுள்ள இரு தாவரங்களை பிரித்தெடுக்கப் பயன்படும் முறை

(a) பின்னப் படிமாக்கல் (b) பதங்கமாக்கல் (c) எளிய காய்ச்சி வடித்தல் (d) நீராவியால் காய்ச்சி வடித்தல்

5) கீழ்கண்டவைகளும் எத்தன்மையான மாசுக்களை கொண்ட சேர்மங்களை நீராவியால் காய்ச்சி வடித்து தூய்மைப்படுத்தலாம்

(a) எளிதில் ஆவியாக மாசுக்கள் (b) ஆவியாகும் மாசுக்கள் (c) நீரில் கரையா மாசுக்கள் (d) (a) மற்றும் (b)

6) நிலையான நிலைமை திண்மமாயிருப்பின், சேர்மங்களின் பிரிகை எவ்வகையில் நடைபெறும்

(a) பரப்புக் கவர்ச்சி முறை (b) பங்கீட்டு முறை (c) பங்கீட்டு மற்றும் பரப்புக் கவர்ச்சி முறை (d) பங்கீட்டு அல்லது பரப்புக் கவர்ச்சி முறை

7) குழாய் வண்ணப் பிரிகை எ க்கொள்கையின் அடிப்படியில் செயல்படுகிறது

(a) பரப்புக் கவர்ச்சி (b) பங்கீட்டு முறை (c) உறிஞ்சுதல் (d) பிரிகையடைதல்

8) ஏறுமுக வடிதாள் பரப்பொருட்டு வண்ணப் பிரிகையில் கரைப்பான் எவ்வாறு நகருகிறது

(a) மேல்நோக்கி நகரும் (b) கீழ்நோக்கி நகரும் (c) பக்க வாட்டில் நகரும் (d) எதுவுமில்லை

9) பல்வேறுபட்ட கரிமச் சேர்மங்கள் நிலைத் தன்மையுடன் இருப்பதற்கு காரணம்

(a) கார்பன் சங்கிலித் தொடர் (b) குறைந்த கொதிநிலை (c) பலபடியாக்கல் (d) மாற்றியங்கள் உருவாதல்

## பகுதி - ஆ

3 x 2 = 6

10) படிகமாக்கல் முறையில் மேற்கொள்ளப்படும் வெவ்வேறு படிகள் யாவை?

11) நீராவியால் காய்ச்சி வடித்தல்-வரையறு.

12) காய்ச்சி வடித்தலின் வகைகள் யாவை?

## பகுதி - இ

2 x 3 = 6

13) குறைந்த அழுத்தத்தில் காய்ச்சி வடித்தலின் நன்மைகள் யாவை?

14) வடிதாள் பரப்பொட்டு வண்ணப் பிரிகையின் வகைகள் யாவை?

## பகுதி - ஈ

5 x 5 = 25

15) திண்மச் சேர்மங்களை பிரித்தெடுக்கும் முறைகளை விளக்குக.

16) குறிப்பு வரைக.

(a) பின்னப் படிகமாக்கல்

(b) கரைப்பான் சாறு இறக்குதல்

(c) நீராவியால் காய்ச்சி வடித்தல்

(d) குறைந்த அழுத்தத்தில் காய்ச்சி வடித்தல்

17) மெல்லிய படல வண்ணப் பிரிகை மூலம் சேர்மங்களை பிரித்தெடுக்கும் முறையை விளக்குக.

18) வண்ணப் பிரிகையின் கொள்கைகளை விளக்குக.

19) கரிமச் சேர்மங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in